**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.329/2016**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : Thiru.Jeevan |
| Father's Name | : இருதயராஜ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2019.

**முதல் விசாரணை -**

நான் தற்பொழுது தனியார் நிறுவனத்தில் பணி புரிந்து வருகிறேன். 17.11.2014 அன்று என்னுடைய அத்தை எலிசம்மாவின் அவருக்கு சொந்தமான கே. கே புதூரில் அவரை விடுவதற்காக நான், என்னுடைய அப்பா இருதயராஜ் மற்றும் பாட்டி ஜோதியம்மாள் ஆகியோர் எங்களுடைய இன்டிகா காரில் பூந்தமல்லியில் இருந்து கே.கே.புதூருக்கு வந்து கொண்டிருந்தோம். அப்பொழுது வீட்டிற்கு வேண்டிய பொருட்களை வாங்குவதற்காக சென்னை டு திருச்சி செல்லும் சாலையில் சர்வீஸ் ரோடில் சிங்க பெருமாள் கோயிலில் தத்தேரி என்ற இடத்தில் நிறுத்தி விட்டு அதற்கு எதிர்திசையில் மதுரை டு சென்னை செல்லும் சாலையைக் கடக்க முற்பட்ட பொழுது, கருடா கம்பெனி பஸ்ஸானது யூ டெர்ன் எடுத்து வந்தது. அப்பொழுது சென்னை டு மதுரை சென்ற பேருந்தானது மோதியது. மோதியதன் காரணமாக கருடா பேருந்தானது எனது அப்பாவின் பின் மண்டையில் இடித்தது. இடித்ததன் காரணமாக அப்பா சம்பவ இடத்திலேயே சுயநினைவை இழந்தார். அவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர். பின்னர் அவரை மேல் சிகிச்சைக்காக எஸ்ஆர்எம் மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் 2 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி அவர் இறந்து விட்டார். விபத்து ஏற்படுத்திய கருடா பேருந்தை ஓட்டியவர் ஆஜர் ஆகியுள்ள எதிரி ஆவார். போலிசார் மருத்துவமனையில் வைத்து என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை -**

நான் எனது போலிஸ் விசாரணையில் - திருத்தேரியில் காரை நிறுத்தி விட்டு இறங்கி மளிகை சாமான் வாங்குவதற்காக ஜிஎஸ்டி சாலையை கடந்து கட்டிங் சாலையை கடக்க நின்று கொண்டிருந்த பொழுது தனியார் பேருந்தின் மீது அரசு பேருந்து மோதி எனது அப்பா தூக்கி எறியப்பட்டு, அரசு மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டார், உடனே நானும் என் உறவினர்கள் சிலரும் புறப்பட்டு வந்தோம். விபத்து நடந்த இடத்திற்கு வந்து பார்த்து விசாரித்து தெரிந்து கொண்டோம் என்று போலிஸ் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் ஆம். நான் சம்பவ இடத்திற்கு செல்ல வில்லை என்றும் சம்பவத்தை பார்க்க வில்லை என்றும் சொன்னால் இல்லை. நான் பார்த்தேன். இறந்தவர் எனது தந்தை என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் ஜீப்ரா கிராசிங் இல்லை என்றால் சரியல்ல, இருந்தது. எனது அப்பா ஜீப்ரா கிராசிங்கை கடக்க வில்லை என்றும் சென்டர் மீடியன் மீது ஏறி கடக்க முற்பட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. சென்டர் மீடியன் மீது நிறைய மரங்கள் இருந்தன என்றால் சரி. விபத்தானது அரசு பேருந்து கவனக்குறைவாக வந்து தனியார் பேருந்து மோதி அதன் காரணமாகத் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடம் யூ டெர்ன் எடுப்பதற்கான இடம் என்று சொன்னால் சரியல்ல. இழப்பீடு பெறுவதற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Sd. xxxxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.